திரு. கரு. சீமைச்சாமி : உரப் பற்றுக்குறை எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறது. எந்தக் காலத்திலே உரம் வேண்டுமோ அப்பொழுது கொடுக்கப் படுவதில்லை. முதலமைச்சர் அவர்களிடம் அமெரிக்காவிலிருந்து வருகின்ற உரத்திற்கு அடையாளமாகக் கொடுத்தார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆகவே இதையெல்லாம் ஆரம்பத்திலேயே இங்கு வரவழைத்து விவசாயிகளுக்கு வசதியாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடுகள் செய்யும்?

கனம் திரு. பூ. கக்கன் : கொடுப்பதையெல்லாம் ஆரம்பத்திலேயே கொடுத்துவிடமாட்டார்கள். மத்திய அரசாங்கத்தின் மூலமாக இந்த மாநிலத்திற்கு எவ்வளவு தூரம் கொடுத்து உதவ முடியுமோ அவ்வளவு தூரம் கொடுக்க முன் வந்துகொண்டிருக்கிறார்கள். நான் பட்ஜெட் விவாதத்தின்போதுகூட சொன்னபடி காலப்போக்கிலே அதிகப்படியாக வரும். காலப்போக்கிலே இதுபோன்று இருக்காது என்று நினைக்கிறேன்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Though it is a fact that manure will be supplied throughout the year, at least connot the Government take the responsibiliy of storing these fertilisers and releasing them at the time of transplantation, i.e., in June July and August for Samba and November, December and January for Navarai ? The present release of fertilisers is such that actually in the season the ryot is not benefited. Will the Government consider this?

THE HON. SRI P. KAKKAN : The Government are taking the responsibility through the co-operative society. Whenever fertilisers are available, they are given to the farmers

Cattle Development Scheme

* 512 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state with reference to the answer given to Question No. 272 on 4th November 1965, when the Intensive Cattle Development Scheme will be extended to other districts in the State?

கனம் திரு. பூ. கக்கன் : மும்முர கால்நடை வளர்ச்சித் திட்டத்தை மற்ற மாநிலங்களுக்கு விரிவுப்படுத்த அரசாங்கத்திடம் இப்போது செயற் குறிப்பு ஏதும் இல்லை.

Agricultural Seminars

* 513 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to organise Agricultural Production Seminars, in the State ; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) வேளாண்மை உற்பத்திக் கருத்தரங்குகளை நடத்துவது பற்றிய செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

30th March 1966]

ஆனால், 1965 ஆகஸ்டில் தஞ்சாவூரில் ஒரு கருத்தரங்கும் 1966 பெப்ரவரியில் கோயம்புத்தூரில் மற்றொன்றுமாக இரு கருத்தரங்குகள் நடைபெற்றன. மேற்கூறிய இரு கருத்தரங்குகளையும் மத்திய உணவு—வேளாண்மை அமைச்சர் தொடங்கி வைத்தார். இக் கருத்தரங்குகளில் கீழ்க்கண்ட பொருள்கள் பற்றி விவாதிக்கப் பட்டன.

தஞ்சாவூர் கருத்தரங்கு :

(1) தர விதைகள், உரங்கள், பயிர்களை அழிக்கும் பூச்சிகளையும் நோய்களையும் கட்டுப்படுத்தல், கடன் வசதி அளித்தல் போன்ற அம்சங்களில் சிறப்பாகக் கவனம் செலுத்தி, தீவிரமாக நெல் சாகுபடி செய்தல்.

(2) தஞ்சாவூரில் (கலப்புச் சாகுபடி உள்பட) பல பயிர்களை விளைவிப்பதற்கான வாய்ப்பும் அதற்குத் தேவையான வசதிகளும்.

(3) (வடிமுனைக் கிணறுகள், இறைவைப் பாசனம் உள்பட) நீர் வசதி நிர்வாகமும் வடிகால் வசதிகளும்.

கோயம்புத்தூர் கருத்தரங்கு :

(1) நெல் உற்பத்தியை உச்ச அளவிற்குப் பெருக்குதல்.

(2) புன்செய்தானிய உற்பத்தியை உச்ச அளவிற்கு உயர்த்துதல்.

(3) வாணியப் பயிர்களின் உற்பத்தியை அதிக அளவிற்குப் பெருக்குதல்.

திரு. வை. சங்கரன் : இந்த இரண்டு கருத்தரங்குகளும் நல்ல பலனைக் கொடுத்ததா என்று அறிய விரும்புகிறேன். அப்படியென்றால் மற்ற மாவட்டங்களில் அங்கேயுள்ள விவசாயப் பிரச்னைகள் சம்பந்தமாக கருத்தரங்குகள் நடத்துவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : நான் முதலிலே சொல்லும்பொழுதே சொன்னேன். பின்னால் சில ஜில்லாக்களில் நடத்தவேண்டி வரும். அப்படி வரும்பொழுது எந்த எந்த ஜில்லாக்களில் முதலிலே நடத்தலாம் என்று ஆராய்ந்து அந்த ஜில்லாக்களில் நடத்துவதற்கு அரசாங்கம் முன்வரும்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தஞ்சை ஜில்லாவிலும், கோயம்புத்தூர் ஜில்லாவிலும் நடந்த கருத்தரங்குகளில் பல நிபுணர்களும், அறிவாளிகளும் கலந்து கொண்டு நல்ல ஆலோசனைகளைத் தெரிவித்தார்கள். அதை அரசாங்கம் வெளியிட்டிருக்கிறதா ? அப்படி வெளியிடாமல் இருந்தால் அதை வெளியிட்டு மற்ற விவசாயிகளும் அதைப் புரிந்து பயன்பெறுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

[30th March 1966

கனம் திரு. பூ. கக்கன் :

The recommendations made by Groups 1 and 2 of the seminar are under the consideration of the Director of Agriculture. அவர்கள் கன்சிடர் செய்து அந்த ரிப்போர்ட் வந்த பிறகுதான் வெளியிடப்படும். The recommendations made by Group 3 are under the consideration of the Public Works Department. இது பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டின் கன்சிடரேஷனில் இருக்கிறது. அவர்கள் பார்த்து முடிவுக்கு வந்த பிறகு அது விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல் : மாவட்ட அளவிலே நடைபெறுகின்ற கருத்தரங்குகளில் வாய்ப்பு உள்ளவர்களும், ஒரு சில அதிகாரிகளும்தான் பங்கு கொள்ள முடிகிறது. பொதுமக்கள் இதை முக்கியமாகக் கருதுகின்ற வகையில் குறிப்பாக தஞ்சை திருச்சி, வட ஆற்காடு, மதுரை போன்ற நான்கு மாவட்டங்களில் உள்ள பிளாக்குகளுக்குள்ளே கருத்தரங்குகள் நடத்துவதற்கு, இந்த ஆண்டிற்குள்ளாவது கருத்தரங்குகள் ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒவ்வொரு பிளாக்கிலேயும் நாம் செய்ய முடியாது. செலவும் ஜாஸ்தியாகும். ஜில்லாக்களில் நடக்கும் பொழுது அந்தந்த பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களும், விவசாயத்திலே அதிக ஆர்வம் உள்ள விவசாயிகளும், சட்டசபை அங்கத்தினர்களில் பலரும் கலந்து கொள்கிறார்கள். ஆகவே, இவ்வாறுதான் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Raid for currency notes

* 514 *Q.*—Sri. V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any raid has been conducted in a shop in Sowcarpet area in Madras City to seize 100 Rupee Currency Notes; and

9–00 a.m. (*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

மதுரையில் Cr. P. C. 54-வது செக்ஷன்கீழ் கைது

* 515 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா.—

(அ) 1964-ம் வருடம் மதுரை டவுன் போலீஸ் நிலையங்களில் 54 Cr. P. C. பிரகாரம் எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் ?

(இ) அவர்களில் எத்தனைபேர் பழைய குற்றவாளிகள் ?

(உ) தண்டிக்கப்பட்டவர்கள் எத்தனைபேர் ?